**அம்பன்கங்ககோரளை பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பன்கங்ககோரளை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பன்கங்க கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 08 செயற்திட்டங்களின் முடிவடைந்த வேலைகளின் பெறுமதி குறிப்பிடப்படாமல் பெறவேண்டிய தொகையாக உடன்படிக்கை பெறுமதி நிர்மாணக் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 105,562 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) ரம்முதுகம சனசமூக மண்டபத்தின் வேலி மற்றும் நுழைவாயில் திருத்த வேலைக்காக ரூபா 56,089 தொகை 2019 ஆம் ஆண்டின் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அதனை நிறைவேற்றாதிருக்கையில் தொடர்ந்தும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டம் தற்போது செயற்படுத்தப்படுவதில்லையென நடவடிக்கை எடுப்பதாக | செயற்திட்டம் நிறைவேற்றப்படாமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் செயற்படுத்தா விட்டால் கணக்கு களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அலகல்ல ஸ்ரீ பத்தின தேவாலயத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டத்தின் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 140,118 ஆக இருந்த போதும் ரூபா 227,337 என ரூபா 87,219 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட் ரூபா 49,000 பெறுமதியான கைவிரலடையால இயந்திரம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டுகளில் ஏலவிற்பனை செய்யப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் மொத்தம் ரூபா 141,860 தொகை அந்தந்த ஆண்டுகளில் கணக்குகளில் இருந்து அகற்றாமல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2. கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 16 கணக்கு விடயங்களுக்குரிய் ரூபா 4,615,619 ஆன மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக அட்டவணைகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | தகவல் தேடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக | தகவல்கள் பரீட்சிக்கப்பட்டு கணக்கு மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 177 | விலைகோரல் மேற்கொள்ளாமல் இரண்டு சந்தர்ப்பங்களில் 30 நீர்மானிகள் மற்றும் | நிதி மற்றும் கொள்கை செயற்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 50 வீதி விளக்குகள் மற்றும் உதிரிப்பாகங்கள் ரூபா 204,995 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன | | |
| (ஆ) | 2006 பெப்ரவரி 21 ஆந் திகதிய 2006/02 ஆம் இலக்க மத்திய மாகாணத்தன் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கூற்றறிக்கை 02 ஆம் பந்தி | தலைவரின் பிரயாணம் நேரடியாக உள்ளூராட்சி மன்றத்திற்குரிய நடவடிக்கையாக இருக்க வேண்டியதுடன் அப்பிரயாணத்திற்காக அழைப்பு கடிதங்கள் மற்றும் வருகை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டில் சனவர மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 43,000 பிரயாணச் செலவினமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அனைத்து அழைப்புக்களும் கடிதங்கள் மூலம் இடமபெறாதடன் கடமை தேவை அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 705,248 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 415,614 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய 08 நிர்மாணக் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,656,898 அறவிட வேண்டியிருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 8,924,369 ஆன மீதியொன்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் மீதி ரூபா 3,115,722 ஆக இருந்தது. | பெற வேண்டிய வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண மற்றும் நானாவித கடன்கொடுத்தோரின் கூட்டுத்தொகை ரூபா 11,963,811 தொகை தீர்வு செய்யப்படாதிருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கு 5 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 9,186,528 மற்றும் ,05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் மீதி ரூபா 1,578,618 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய செலவினங்களை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1994 முதல் 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 539,168 ஆன கணக்காய்வுக் கட்டண பெறுமதி கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை கணக்காய்வுக் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்காய்வுக் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை நிதியத்தின் பேரில் ரூபா 100,751 ஆன மதிப்பீடொன்றின் கீழ் திப்பட்டுகனத விளையாட்டரங்கின் ஓரச் சுவரை நிர்மாணிப்பதற்காக கிராம அபிவிருத்தி சங்கமொன்றுடன் 2020 மார்ச் 11 ஆந் திகதி ரூபா 100,000 இற்கு உடன்படிக்கை மேற்கொண்டு நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது. மேற்பார்வை தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு தெரியப்படுத் தாமலும் மேற்பார்வை செய்யப்படாமலும் மதிப்பிடப்பட்ட தரத்திற்கு இணங்காத வகையில் நிர்மாண வேலைகள் 2020 மார்ச் 16 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு முறையற்ற வகையில் செய்யப்பட்டிருந்த நிர்மாணத்திற்காக தலைவரால் கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்தப்பட்டு ரூபா 80,000 தொகை 2021 மார்ச் 12 ஆந் திகதி ஒப்பந்த சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பொது சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | முறையற்ற நிர்மாணம் மற்றும் கொடுப்பனவு தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |